## 4. அறிவிப்பு

### பேரவைக் குழுக்களுக்கான தேர்தல் அட்டவணையில் மாற்றம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவைக் குழுக்களுக்கான தேர்தல். 2003-2004 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு, பொதுக் கணக்குக் குழு, பொது நிறுவனங்கள் குழு, அவை உரிமைக் குழு ஆகியவற்றிற்கான தேர்தல் அட்டவணையில் பின்வரும் மாற்றங்கள் செய்யப்படுகின்றன. தேர்ந்தெடுக்கப்பட விரும்பும் வேட்பாளர்கள் தங்களது வேட்புத் தாள்களை.... (குறுக்கீடுகள்)

110-வது விதியின்கீழ் விவாதம் கூடாது என்பது விதி. விவாதிக்க நான் அனுமதிக்கவில்லை. விதிப்படி விவாதிக்க நான் அனுமதிக்கவில்லை. ஆகவே, தாங்கள் பேசியது அனைத்தும் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

தேர்ந்தெடுக்கப்பட விரும்பும் வேட்பாளர்கள் தங்களது வேட்புத்தாள்களை 2003 ஆம் ஆண்டு மே திங்கள் 12 ஆம் நாள், திங்கட்கிழமை முற்பகல் 11-00 மணிக்குள் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும்.

நண்பகல் 12-00

வேட்புத்தாள்கள் 2003 ஆம் ஆண்டு மே திங்கள் 12 ஆம் நாள், திங்கட்கிழமை மாலை 5-00 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 2003 ஆம் ஆண்டு மே திங்கள் 13 ஆம் நாள், செவ்வாய்க்கிழமை முற்பகல் 11-00 மணிக்குள் விலகிக்கொள்ளலாம். வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின் 2003 ஆம் ஆண்டு மே திங்கள் 14 ஆம் நாள், புதன்கிழமை குழுக்களுக்கான தேர்தல் நடைபெறும். (குறுக்கீடுகள்)

## 5. கவன ஈர்ப்பு

### (அ) அரூர் தொகுதி, அங்குத்தி சுனையின் குறுக்கே அணை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. கிருஷ்ணமூர்த்தி

அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. கிருஷ்ணமூர்த்தி. (குறுக்கீடுகள்) திரு. கிருஷ்ணமூர்த்தி. (குறுக்கீடுகள்) 110-வது விதியின் கீழ் விவாதம் கிடையாது. விவாதம் கிடையாது. நான் அனுமதிக்கவில்லை.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாங்கள் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) விதியைப் படித்து விட்டேன். இதிலே விவாதம் கிடையாது. (குறுக்கீடுகள்) நான் அனுமதிக்கவில்லை. (குறுக்கீடுகள்) அனுமதிக்கவில்லை. (குறுக்கீடுகள்) விதி 110-ன்கீழ் விவாதம் கிடையாது. அவ்வளவுதான். (குறுக்கீடுகள்) 110-வது விதியின்கீழ் விவாதம் கிடையாது. ஆகவே, நான் அனுமதிக்கவில்லை. ஆகவே, அதுபற்றி நீங்கள் பேசிய அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றது. திரு. கிருஷ்ணமூர்த்தி.

**திரு. வே. கிருக்ஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டம், அரூர் தொகுதி, ஊத்தங்கரை வட்டம், அங்குத்தி சுணையின் குறுக்கே அணை கட்டுவதற்காக அறிவிப்பு செய்தும் இதுவரை பணி துவங்கப்படாதது குறித்த" அவசர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### அறிக்கை

(1) தருமபுரி மாவட்டம், அரூர் தொகுதி, ஊத்தங்கரை வட்டம், அங்குத்தி சுணையின் குறுக்கே அணை கட்டும் திட்டம் 2001-2002-ம் ஆண்டு

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கையின்போது அறிவிக்கப்பட்ட திட்டங்களுள் ஒன்றாகும். இத்திட்டத்தில் சிங்காரப்பேட்டை பகுதி— ஜவ்வாது மலையில் அங்குத்தி சுணையிலிருந்து உற்பத்தியாகும் தண்ணீர் வரும் ஓடை பராமரிப்பின்றி நிலங்களின் ஊடே பரவிச் சென்று வீணாவதை மலை அடிவாரத்தில் தடுப்பு அணை கட்டி ஏற்கெனவே உள்ள இடதுபுறக் கால்வாய் மற்றும் வலதுபுறக் கால்வாய் புனரமைப்பு செய்து அதன் வழியாக ஊத்தங்கரை வட்டத்திலுள்ள கிணத்துக்குட்டை குமரன் ஏரி, ரெட்டி வலசை ஏரி, கிட்டம்பட்டி ஏரி, பெருமாள் கோயில் ஏரி, கூடப்பட்டான் ஏரி, வெள்ளக் கவுண்டன் ஏரி, மிட்டப் பள்ளி புது ஏரி போன்ற ஏரிகளுக்கு நீர் அளிப்பதன் மூலம் ஏரிகள் மூலமாக 500 ஏக்கர் நிலம் பயனடையும் வண்ணம் ரூ.60.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டது.

(2) அரசின் நிதிநிலை நெருக்கடி காரணமாக மேற்படித் திட்டம் நபார்டு வங்கியின் உதவி பெற்று பணி மேற்கொள்வதற்காக, நபார்டு வங்கியின் வழிகாட்டுதலுக்கிணங்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டு சென்னை, பொதுப் பணித் துறை நீர்வள ஆதார அமைப்பு, திட்ட உருவாக்கம் தலைமைப் பொறியாளர் அவர்களுக்கு அனுப்பப்பட்டது. தற்போது இம்மதிப்பீட்டில் திட்ட உருவாக்கம் தலைமைப் பொறியாளர் அவர்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ள சில தொழில்நுட்பக் குறிப்புகள் நிவர்த்தி செய்ய தருமபுரி பொதுப் பணித் துறை, நீர்வள ஆதார அமைப்பு, மேல்பெண்ணையாறு வடிநில கோட்ட செயற் பொறியாளரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டம் 2003-2004-ம் நிதியாண்டில் நபார்டு வங்கியின் நிதி உதவி பெற வேண்டிய பட்டியலில் சேர்க்கப்பட்டு, நிதி உதவி பெறப்பட்டவுடன் பணி செயல்முறைக்கு எடுத்துக்கொள்ளப்பட உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கிருஷ்ணமூர்த்தி, கேள்வியைக் கேட்பதாக இருந்தால் கேளுங்கள். இல்லையென்றால் அடுத்த கவன ஈர்ப்பை எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) திரு. கிருஷ்ணமூர்த்தி.

**திரு. வே. கிருக்ஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...(குறுக்கீடுகள்)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.